FIRST INFORMATION REPORT

(Under Section 173 BNSS)

முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8316745

1. District : மாவட்டம் **Thoothukudi** PS: காவல்நிலையம் **Vigilance and Anti-Corruption Thoothukudi** Year: ஆண்டு **2026** FIR No.: மு.த.அ. எண் **05/2026** Date: நாள் **18.06.2026**

2. (i) Act சட்டம்: **Prevention of Corruption Act, 1988 as Amended in 2018** Sections பிரிவுகள்: **7 (b)**

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை **12.06.2026 at about 11.46 hrs 15.06.2026 at about 16.30 hrs and 17.06.2026 at about 12.00 hrs**

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **18.06.2026** Time : நேரம் **08.00 hrs**

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **18.06.2026** Time : நேரம் **09.00 hrs**

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் **கணினி தட்டச்சு மூலமாக**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **About 15 Kms South**

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி **VAO Office, Mudivaithanendal village Thoothukudi Taluk**

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.ந.மாதாசெல்வி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் நவநீதகிருஷ்ணன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் (g) Address : முகவரி 8/206F,அம்மன் கோவில் தெற்குதெரு, துறையூர், கங்கைகொண்டான், திருநெல்வேலி

7. Details of Kncwn/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.செந்தில்குமார், கிராம நிர்வாக அலுவலர்,முடிவைத்தானேந்தல் கிராமம், தூத்துக்குடி தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

---

10 Total value of properties stolen / involved : ----
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any: ----
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed V.Annalakshmi Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

N. Mathasalini 18.06.26

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

V 18/6/2026
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court: 18.06.2026 at 09.50 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் Inspector of Police.
Rank: நிலை V.ANNALAKSHMI
VAW, Thoothukudi

Attachment to Column No.12 of First Information Report in Thoothukudi Vigilance and Anti-Corruption Cr.No.05/2026

பணிந்து அனுப்பப்படுகிறது.

இன்று 18.06.2026-ம் தேதி காலை 08.00 மணிக்கு V.அன்னலெட்சுமி, காவல் ஆய்வாளர், தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆகிய நான் நிலையத்தில் அலுவலில் இருந்தபோது திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான், துறையூர், அம்மன் கோவில் தெற்குதெரு, கதவு எண்.8/206,F என்ற முகவரியில் குடியிருந்து வரும் திருமதி.ந.மாதாசெல்வி என்பவர் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனு கொடுத்தார். அந்த புகார் மனுவில் அவரது மாமனார் ஆறுமுகம் பெயரில் முடிவைத்தானேந்தல் கிராமம் சர்வே எண் 678A-ல் அமைந்துள்ள 2.47 சென்ட் நிலம் உள்ளது என்றும், அவரது மாமனார் 12.03.1973-ம் தேதி காலமாகி விட்டதால், அவரது வாரிசுதாரர்களான புகார்தாரரின் கணவர் திரு.நவநீதகிருஷ்ணன் மற்றும் அவரது அண்ணன்கள் சுப்பிரமணியன், முத்துசாமி, ரவிச்சந்திரன் ஆகியோர் பெயர்களை பட்டா எண்.176-ல் சேர்க்க கேட்டு இ-சேவை மையம் மூலம் 19.05.2026 அன்று மனு சமர்ப்பித்ததாகவும், அது முடிவைத்தானேந்தல் கிராம நிர்வாக அலுவலரால் நிராகரிக்கப்பட்டதாகவும், பின்னர் 06.06.2026 அன்று மீண்டும் விண்ணப்பித்ததாகவும், மேற்படி பட்டா எண்.176-ல் வாரிசுதாரர்களின் பெயரை சேர்க்க பரிந்துரை செய்ததற்காக முடிவைத்தானேந்தல் கிராம நிர்வாக அலுவலர் திரு.செந்தில்குமார் ரூ.12,500/- லஞ்சம் கேட்பதாகவும், எனவே தன்னிடம் லஞ்சம் கேட்கும் முடிவைத்தானேந்தல் கிராம நிர்வாக அலுவலர் திரு.செந்தில்குமார் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்திருந்தார். நான் அந்த புகார் மனுவை பெற்று அது குறித்து இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட முடிவைத்தானேந்தல் கிராம நிர்வாக அலுவலர் திரு.செந்தில்குமார் பற்றியும் இரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தையை அறிந்தும், புகார் மனு மீது ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அதனை கனம் காவல் கண்காணிப்பாளர், தென்சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, இயக்குநரகம், சென்னை அவர்களிடம் தொலைபேசியில் தெரிவித்து அனுமதி பெற்றும் புகார் மனுவின் தன்மைக்கேற்ப தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை குற்ற எண் 05/2026

பிரிவு 7(b) of PC Act, 1988 as Amended in 2018-படி 18.06.2026-ம் தேதி காலை 09.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர்: ந.மாதாசெல்வி, வயது 44/26, க/பெ.நவநீதகிருஷ்ணன், 8/206.F, அம்மன் கோவில் தெற்குதெரு,துறையூர், கங்கைகொண்டான், திருநெல்வேலி. செல் : 99428 09819, பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, தூத்துக்குடி. அய்யா / அம்மா, நான் மேற்படி முகவரியில் என் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனது கணவர் திருநெல்வேலி மாவட்டம், துறையூரில் 2013-ம் ஆண்டு முதல் பலசரக்கு கடை வைத்து நடத்தி வருகிறார். நான் அவருக்கு உதவியாக கடையில் இருந்து வருகிறேன். எனது கணவர் நவநீதகிருஷ்ணனுக்கு சொந்த ஊர் தூத்துக்குடி மாவட்டம், முடிவைத்தானேந்தல் ஆகும். எனது மாமனார் ஆறுமுகம் த/பெ.மாடன் என்பவர் 12.03.1973-ம் ஆண்டிலும், மாமியார் தெய்வானை 05.05.1985-ம் ஆண்டு காலமாகி விட்டனர். எனது மாமனாருக்கு முடிவைத்தானேந்தல் கிராமம் சர்வே எண் 678யு-ல் சுமார் $3^{1}.{}_{2}$ சென்ட் அளவுள்ள நிலம் உள்ளது. எனது மாமனார் ஆறுமுகத்திற்கு 1.சுப்பிரமணியன், 2.முத்துசாமி 3.ரவிச்சந்திரன் 4.நவநீதகிருஷ்ணன் ஆகியோர் வாரிசுதாரர்கள் ஆவர். எனது கணவர் நவநீதகிருஷ்ணனும் வாரிசுதாரர் ஆவர். மேற்படி நிலம் சம்பந்தமாக எனது மாமனார் பெயரில் உள்ள பட்டா எண்.176-ல் வாரிசுதாரர்களான எனது கணவர் நவநீதகிருஷ்ணன் மற்றும் அவரது அண்ணன்மார்களான 1.சுப்பிரமணியன், 2.முத்துசாமி 3.ரவிச்சந்திரன் ஆகியோர்களின் பெயர்களை பட்டாவில் சேர்க்க, எனது கணவர் நவநீதகிருஷ்ணன் சார்பில் திருநெல்வேலி தாலுகா ஆபீஸ் அருகில் உள்ள இசேவை மையத்தில் கடந்த 19.05.2026ம் தேதி மனு எண் 2026/0103/28/023546-ன் படி விண்ணப்பத்திருந்தேன். ஆனால் அந்த மனுவினை மூலப்பத்திரம் சமர்ப்பிக்கவில்லை என்று கூறி நிராகரித்துவிட்ட குறுந்தகவல் எனது மொபைல் எண் 99428 09819 க்கு 23.05.2026-ம் தேதி வந்தது. அதன் பின்னர் 06.06.2026ம் தேதியன்று மீண்டும் பட்டா எண்.176-ல் வாரிசுதாரர்களின் பெயரினை சேர்க்க கேட்டு பட்டா மாறுதல் மனு எண் 2026/0103/28/029179-ன் படி இ-சேவை மையம் மூலம் விண்ணப்பித்தேன். பின்னர் 12.06.2026-ம் தேதி முடிவைத்தானேந்தல் கிராம நிர்வாக அலுவலகம் அருகில் கடை வைத்திருக்கும் திருமதி.ரம்யா அவரது செல்போன் எண் 95009 22016ல் இருந்து எனது செல்பொன் எண் 99428 09819-ற்கு சுமார் 11.45 மணியளவில் போன் செய்தார். அப்போது நான் பேருந்தில்

சென்று கொண்டிருந்ததால் போனை எடுக்க முடியவில்லை. பின்னர் நான் பேருந்தில் இருந்து ரம்யாவுக்கு சுமார் 11.46 மணியளவில் போன் செய்த போது ரம்யா போனில் பேசிவிட்டு கிராம நிர்வாக அலுவலரிடம் போனை கொடுத்தவுடன் கிராம நிர்வாக அலுவலர் என்னிடம் செல்போனில் பட்டாவில் வாரிசுதாரர்களின் பெயர்களை சேர்க்க பரிந்துரை செய்து அனுப்புவதற்கு கிராம நிர்வாக அலுவலர் அவர்களுக்கு லஞ்சமாக ரூ.11,000/- கண்டிப்பாக கொடுத்தால் பரிந்துரை செய்து அனுப்பி வைப்பதாக கூறினார். அதன் பின்னர் 15.06.2026ம் தேதியன்று கிராம நிர்வாக அலுவலரின் செல்போன் எண் 93848 30224ல் இருந்து எனது செல்போன் எண் 99428 09819-ற்கு மாலை சுமார் 4.30 மணியளவில் போன் செய்து லஞ்சப்பணம் ரூ.11,000/-ஐ ரம்யா அவர்களிடம் கொடுத்துவிட்டீர்களா என்று கேட்டார். அதற்கு நான் துக்க நிகழ்ச்சி ஒன்றில் இருப்பதாக சொல்லிவிட்டு வேறுவழியில்லாமல் சரி சார் என்று சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டேன். மறுநாள் (16.06.2026) நான் கிராம நிர்வாக அலுவலரின் செல்போன் எண் 93848 30224ல் போன் செய்து பேசிய போது கோர்ட்டில் இருப்பதாக அப்புறமா கூப்பிடுகிறேன் என்று சொல்லி போனை வைத்துவிட்டார். இந்நிலையில் நான் நேற்று (17.06.2026) காலை சுமார் 12.00 மணியளவில் முடிவைத்தானேந்தல் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் சென்று அங்கிருந்த கிராம நிர்வாக அலுவலர் திரு.செந்தில்குமார் அவர்களை சந்தித்து பட்டாவில் வாரிசுதாரர்களின் பெயர்களை சேர்ப்பதற்கான மனு மீதான நடவடிக்கை குறித்து கேட்டேன். அப்போது முடிவைத்தானேந்தல் கிராம நிர்வாக அலுவலர் திரு.செந்தில்குமார் அவர்கள் லஞ்சமாக கேட்டிருந்த பணம் ரூ.11,000/- என்னாச்சு என்று என்னிடம் கேட்டார். நான் உடனே அவரிடம் சார் கையில் வைத்திருந்த பணம் செலவாகிவிட்டது, வெறும் ரூ.2,000/-ம் தான் கையில் உள்ளது என்று கூறினேன். உடனே அவர் சரி அந்த பணத்தை இப்போது என்னிடம் கொடுங்கள் நான் பரிந்துரை செய்து அனுப்பிவிடுவதாக கூறினார். நானும் வேறு வழியில்லாமல் என் கையில் இருந்த பணம் ரூ.2,000/-தை அவரிடம் கொடுத்து விட்டேன். மீதிப்பணம் ரூ.9,000/-தை நாளைக்கு (18.06.2026) கொண்டு வந்து என்னிடம் கொடுத்து விடுங்கள் என்று கூறினார். நானும் அவரிடம் வேறு வழியில்லாமல் சரி சார் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதன் பின்னர் நான் வீட்டிற்கு வந்த பிறகு எனது செல்போன் எண் 99428 09819க்கு மாலை சுமார் 06.30 மணியளவில் எனது மனுவை கிராம நிர்வாக அலுவலர் மண்டல துணை வட்டாட்சியருக்கு

பரிந்துரைத்து அனுப்பியதாக மெசேஜ் வந்தது. அதன் பின்னர் நான் யோசித்து பார்த்த போது, நாம் ஆவணங்கள் அனைத்தும் சரியாக வைத்திருந்தும் ஒரு அரசு அதிகாரி அவரது வேலையை செய்வதற்கும், செய்த வேலைக்கும் இப்படி லஞ்சம் கேட்கிறாரே என்று எனக்கு மன உளைச்சலாக இருந்தது. எனவே அவர் மீது லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடுத்துவிடலாம் என்று முடிவு செய்தேன். என்னிடம் ரூ.9,000/- லஞ்சம் கேட்கும் முடிவைத்தானேந்தல் VAO திரு.செந்தில்குமார் மீது தக்க நடவடிக்கை எடுக்க கேட்டு இந்த புகார் மனுவினை கொடுக்கிறேன். இப்படிக்கு xxxxxx s/d., by N.மாதாசெல்வி 18.06.2026. இணைப்பு: 1) பட்டா மாறுதல் மனு எண் 2026/0103/28/029179-ன விண்ணப்ப நகல். 2) பட்டா எண் 176-ன் நகல். 3)திரு.ஆறுமுகம், த/பெ.மாடன் இறப்பு சான்றிதழ் நகல். 4)திரு.நவநீதகிருஷ்ணன், த/பெ.ஆறுமுகம் வாரிசு சான்றிதழ் நகல். 5)புதுக்கோட்டை சார்பதிவாளர் ஆவண எண்.280/1964 நகல் 6) திரு.நவநீதகிருஷ்ணன், த/பெ.ஆறுமுகம் என்பவரின் ஆதார் கார்டு எண்.2931 6746 9941-ன் நகல். Sir, Received by me on 18.06.2026 at 08.00 hrs and verified the antecedents of both the complainant and the accused, and after getting the oral permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai and I registered a case in Thoothukudi V&AC Cr.No.05/2026 u/s 7(b) of Prevention of Corruption Act 1988 as Amended in 2018 at 09.00 hrs. xxxxxx s/d., by V.ANNALAKSHMI 18.06.2026, Inspector of Police, V&AC, Thoothukudi. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, வாதியின் அசல் புகார் மனு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டிருந்த இணைப்புகள் ஆகியவற்றை இணைத்து கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை எனது விசாரணைக்கும் எடுத்துக் கொண்டேன்.

V. Annalakshmi
Inspector of Police
V&AC, Thoothukudi.